# DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.88/2015**

Deposition of :PW - 16

| | | |
|---|---|---|
| Name | : சுபாஷ் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 26th day of March 2025.

A1 produced. A4, A6 present. A3 called absent. 355 Cr.PC filed and allowed. A2 not produced.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கன்னங்குறிச்சி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கன்னங்குறிச்சி காவல்நிலைய கு.எண்.261/13 பிரிவு 307, 302 இதச வழக்கு சட்டபிரிவு மாற்றம் 457, 395, 396, 397, 302 இதச வழக்கினை காவல் ஆய்வாளர் மணிமாரன் என்பவர் கடந்த 20.12.2014 தேதி பணிமாறுதலில் சென்றதால் பின்னர் காவல் ஆய்வாளர் இறந்துபோன கண்ணையன் அவர்கள் 22.01.2014 அன்று காவல்நிலைய ஆய்வாளராக பொறுப்பேற்று இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தலைமறைவு எதிரிகளை தேடிய போது எதிரி செல்வம்(எ) எடப்பாடி செல்வம் என்பவர் ஈரோடு மாவட்டம், மொடகுறிச்சி காவல்நிலைய கு.எண்.12/2014 பிரிவு 392 இத.ச வழக்கில் கைதாகி கோவை மத்தியசிறையில் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் மேற்படி எதிரியை சம்பிர்தாய கைது செய்து 06.02.2014 அன்று நீதித்துறை நடுவர் 4 நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கன்னங்குறிச்சி காவல்நிலைய கு.எண்.261/2013 பிரிவு 307, 302 இதச வழக்கு சட்டபிரிவு மாற்றம் 457, 395, 396,

397, 302 வழக்கில் அடைப்பு காவல் உத்தரவு பெற்று கோவை மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளார். 10.02.2014 அன்று செல்வம்(எ) எடப்பாடி செல்வம் என்பவரை போலிஸ காவலில் விசாரிக்கவேண்டி நீதித்துறை நடுவர் எண்.4 க்கு மனு செய்துள்ளார். 12.02.2014 அன்று நீதித்துறை நடுவர் 4 அவர்களின் உத்தரவு பெற்று செல்வம்(எ) எடப்பாடி செல்வத்தை கோவை மத்திய சிறையில் இருந்து அழைத்து வந்து 17 மணிக்கு நீதித்துறை நடுவர் 4 அவர்களிடம் ஆஜர்படுத்தி பின்னர் தக்க வழிகாவலுடன் நிலையம் கொண்டு வந்து உரிய பதிவறையில் பதிவு செய்து சாட்சிகள் கன்னங்குறிச்சி கிராமநிர்வாக அலுவலர் சிவா, கிராமநிர்வாக அதிகாரி உதவியாளர் மாணிக்கம் ஆகிய இருவருக்கும் தகவல் கொடுத்து அவர்கள் வந்தபின் 19 மணிக்கு எதிரி செல்வம்(எ) எடப்பாடி செல்வம் என்பவரை எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலுமின்றி தானா முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்துள்ளார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் நாங்கள் கொலை செய்த வீட்டையும், கொள்ளையடித்த நகைகளையும், அடகு வைத்த இடத்தையும் அடையாளம் காட்டுவதாக கூறியுள்ளார்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் கண்ணையன் பதிவு செய்துள்ளார். அவர் தற்போது உயிருடன் இல்லை. எனக்கு அவருடைய கையெழுத்து தெரியும். என்னிடம் காட்டப்படும் எதிரி செல்வம்(எ) எடப்பாடி செல்வம் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து இறந்துபோன ஆய்வாளர் கண்ணையன் உடையது தான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.37. அதன் அடிப்படையில் சம்பவ இடத்தை எதிரி அடையாளம் காட்டியும் பின்னர் போலிஸ் வாகனத்தில் எதிரி அழைத்துசென்ற கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில், சுண்ணாம்புகாரவீதியில் எதிரி அடையாளம் காட்டிய அம்ரேஸ் என்பவரிடமிருந்து தங்கசெயின் ஒன்று எடை 39 கிராம் 550 மி.கி எடைகொண்ட செயினும், 2 தங்கமோதிரங்களும், 4 கிராம் 410 மி.கிராம் , 3 கிராம்.950 மி.கிராம் எடை கொண்ட மோதிரங்கள் இரண்டும் எதிரி செல்வம் (எ) எடப்பாடி செல்வம் அம்ரேஸ்யிடமிருந்து பெற்று காவல் ஆய்வாளரிடம் ஆஜர் செய்ததை அவர் சாட்சிகள் சிவா மற்றும்

மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த அமரேஸ் என்பவரை ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அன்றைய தினமே செல்வம்(எ) எடப்பாடி செல்வத்தை நீதிமன்றத்தில் ஆய்வாளர் ஆஜர்படுத்தியுள்ளார். பின்னர் சாட்சி ராசாத்தியிடம் எதிரியிடம் கைப்பற்றிய நகைகளை அடையாளம் காட்டி விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

07.03.2014 அன்று எதிரி வினோத்குமார்(எ)முக்கால்அடிவினோத்(எ) சாகுல்அமீது (எ) ராமு என்பவரை தேடி சென்றதில் ரகசிய தகவலின் படி சேலம் புதிய பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தவரை தகவலாளி அடையாளம் காட்ட போலிசாரை கண்டதும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து விசாரித்ததில் அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகள் காளியப்பன், சாரதி ஆகியோர் முன்னிலையில் 11.30 மணிக்கு பதிவு செய்தோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்துசென்றால் நாங்கள் கொலைசெய்த இடத்தையும், வீட்டையும், கொள்ளையடித்த நகையையும், கொலைக்கு பயன்படுத்திய உருட்டு கட்டையை அடையாளம் காட்டுவதாக கூறினார்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் கண்ணையன் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள ஆய்வாளர் கண்ணையன் கையெழுத்து தான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.38. பின்னர் 07.03.2014 மாலை 16 மணிக்கு கன்னங்குறிச்சி காவல்சரகம் ஐட்ஜ்ரோடு அருகில் ஆலமரத்து பக்கம் உள்ள முட்புதரிலிருந்து சம்பவத்திற்கு பயன்படுத்திய உருட்டு கட்டை ஒன்று எதிரி வினோத்குமார் எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் காளியப்பன், சாரதி ஆகியோர் முன்னிலையில் மகஜரில் ஆய்வாளர் கண்ணையன் கைப்பற்றியுள்ளார்.

பின்னிட்டு அன்றைய தினமே 18.30 மணிக்கு ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம், சுப்பையன் வீதி, கே.என்.கே.வீட்டிலுள்ள எதிரி வினோத்குமார் வீட்டிற்கு சென்று அவரது வீட்டில் மறைத்து வைத்திருந்த திருடிய நகைகள் சுமார்

2–1/2 பவுன் தங்கசெயின் ஒன்று, வெள்ளி அரைஞான்கொடி ஒன்று, எதிரி எடுத்து ஆஜர்படுத்தியரை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றியுள்ளார். பின்னர் நிலையம் வந்து எதிரியை பாராவசம் ஒப்படைத்துள்ளார். சாட்சிகள் காளியப்பன், சாரதி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரி வினோத்குமாரிடமிருந்து கைப்பற்றிய நகைகளையும், நீதித்துறை நடுவர் எண்.4 க்கு அனுப்பி வைத்திருந்தார். சுமார் 2–1/2 செயின் மற்றும் வெள்ளி அரைஞான் கொடி கைப்பற்றியதற்கான படிவம் 95 அ.சாஆ.39. உருட்டு கட்டை கைப்பற்றியதற்கான படிவம் 95 அ.சா.ஆ.40.

பின்னர் சாட்சி ராஜாத்தி என்பவரை வரவழைத்து எதிரியிடமிருந்து நகைகளை அடையாளம் காட்டி மறுவாக்குமூலம் பெற்றுள்ளார். பின்னிட்டு 24.01.2014 அன்று சேலம் மத்தியசிறையில் வைத்து எதிரிகள் கண்ணன், பிளோடு செல்வம்(எ) செல்வம்(எ) பன்னீர்செல்வம், மணிகண்டன் ஆகியோரை அடையாள அணிவகுப்பு செய்ய மனு கொடுத்துள்ளார். 29.01.2014 அன்று சேலம் மத்திய சிறையில் சாட்சி ராஜாத்தி என்பவர் எதிரிகள் கண்ணன், பிளோடு செல்வம்(எ) செல்வம்(எ) பன்னீர்செல்வம், மணிகண்டன் ஆகியோரை கனம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் அடையாளம் காட்டினார்.

நீதித்துறை நடுவர் எண்.2 நடத்திய அடையாள அணிவகுப்பு அறிக்கை அசா.ஆ.41. (மேற்படி ஆவணம் எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) 19.02.2014 அன்று தலைமைகுற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோவை மத்திய சிறையில் இருந்த செல்வம் என்ற எடப்பாடி செல்வத்தை அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பிற்கு ஏற்பாடு செய்யும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்தோம். 24.02.2014 அன்று கோவை மத்தியசிறையில் வைத்து நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டுள்ளது. அந்த அடையாள அணிவகுப்பு ஏற்கனவே அ.சா.ஆ 41 ஆக குறியீயடு செய்யப்பட்டுள்ளது.

14.03.2014 அன்றுசேலம் மத்திய சிறையில் இருந்த வினோத்(எ)

முக்கால்அடிவினோத், தீனதயாளன் ஆகியோரின் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டுள்ளது. அந்த அடையாள அணிவகுப்பு அறிக்கை அ.சா.ஆ.42(மேற்படி ஆவணம் எதிரிகளின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது. ). 20.02.2014 அன்று நீதித்துறை நடுவர் 4 அவர்களின் உத்தரவு படி கைப்பற்றிய வழக்கு பொருட்களை வட்டார தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றுள்ளார்.

தடயஅறிவியல் துறையிலிருந்து அளிக்கப்பட்ட பையாலஜிக்கல்அறிக்கை அ.சா.ஆ.43. தடயஅறிவியல் துறையிலிருந்து கிடைக்கப்பட்ட செராலஜிக்கல் அறிக்கை அ.சா.ஆ.44. பின்னர் 07.08.2014 அன்று எதிரிகள் மீது சட்டமாறுதல் அறிக்கை 307, 302, Alter 457, 395, 396, 397, 302 Alter 449. 449, R/w.34, 307, 307 R/w.34. 302, 302, R/w.34, 395, R/w.397, 396 ஆக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வினோத்(எ) வினோத்குமார் என்பவரை புதியபேருந்து நிலையத்தில் எந்த இடத்தில் வைத்து கைது செய்தார் என்று காவல் ஆய்வாளர் கண்ணையன் அவரது வழக்கு ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். காளியப்பன், மற்றும் சாரதி வாக்குமூலத்தில் எந்த எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்ற விவரம் இல்லை என்று சொன்னால் சரிதான். காளியப்பன் மற்றும் சாரதி வாக்குமூலங்கள் ஒரே மாதிரியாக உள்ளதால் ஒருவரின் வாக்குமூலம் மற்றொருவருக்கு கணிணி மூலம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டு, சாட்சிகளிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. அது எந்த கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டது என்றும், எங்கிருந்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எதிரி வினோத்குமார் பொருட்களை எடுத்து ஆஜர்படுத்தியதாக சொல்லும் வீடு எப்படி இருந்தது. அங்கு யார்யார் இருந்தார்கள்

என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாட்சிகள் காளியப்பன் மற்றும் சாராதி ஆகியோர் கன்னங்குறிச்சி காவல்நிலைய எல்லைக்குள் வசிப்பவர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி சாட்சிகளை பயன்படுத்தி வாக்குமூலங்களும், மகஜர்களும் காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரி செல்வம் கோவை மத்தியசிறையிலிருந்து கன்னங்குறிச்சி காவல்நிலையம் அழைத்து வரப்பெற்ற பின்பு சாட்சிகள் காவல்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளார்கள். சேலத்திலிருந்து ஓசூருக்கு சுமார் 160 கி.மீ, 170 கி.மீ இருக்கும் என்று சொன்னால் சரிதான்.

அம்ரேஸ் என்ற நபர் குடியிருக்கும் பகுதி எப்படி இருக்குமென்று எனக்கு தெரியாது. மேற்படி சாட்சி அம்ரேஸ் தான் அடகுகடை நடத்துவதாக விசாரணையில் சொல்லியுள்ளார். அடிக்கடி செல்வம் நகையை கொண்டுவந்து கொடுப்பார் அதை நான் வாங்கிகொள்வேன் என்று போலிசார் விசாரணையில் அம்ரேஸ் செல்லியுள்ளார். அம்ரேஸ் அவரது வாக்குமூலத்தில் ரவி, செல்வத்துடன் வந்து அவரிடம் பணம்கொடுக்கும்படி கேட்டதாக சொல்லவில்லை. அம்ரேஸ் சீட்டு பணம் கையில் இருந்ததால் செல்வத்திற்கு கொடுத்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. செல்வம் கொடுத்த நகைகளின் அடையாளங்களை அம்ரேஸ் அவரது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அ.சா.7 சிவா தனது வாக்குமூலத்தில் செல்வத்துடன் ஆய்வாளர் ஒசூர் சென்றடைந்த நேரம் காலை 6.45 என்றும், அம்ரீஸ் வீட்டிலிருந்து நகைகைளை கைப்பற்றிய நேரத்தையும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.7 சிவா அவரது வாக்குமூலத்தில் அம்ரேஸ்மிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் அடையாளங்களை சொல்லவில்லை என்றால் எடைகளை சொல்லியுள்ளார். அடையாளங்களை சொல்லவில்லை.

வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரிகள் அனைவரும் காவல்நிலையம் கொண்டுவரப்பட்ட பின்பு அவர்கள் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு அதை சாட்சிகள் ராஜாத்திக்கு காண்பித்து அதை வைத்து ராஜாத்தி அடையாள அணிவகுப்பிற்கு தயார்

செய்து அனுப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி தீனதயாளன் என்பவர் அடையாள அணிவகுப்பு சமயத்தில் நிபந்தனை ஜாமீனில் வந்து கன்னங்குறிச்சி காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டுகொண்டிருந்தார் என்றும் அவரை சாட்சி ராசாத்திக்கு காவல்நிலையத்தில் வைத்து காண்பித்து சாட்சி ராசாத்தியை அடையாள அணிவகுப்பிற்கு தயார் செய்தோம் என்றால் சரியல்ல. கண்ணையன் தயாார்செய்த மகஜரை யாரால் எழுதப்பட்டது என்று என்னால் தற்போது சொல்லமுடியாது.

எதிரிகள் செல்வம் மற்றும் வினோத்குமார் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் ஆய்வாளர் நகைகளை கைப்பற்றியதாகவும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு நகைகள் அனைத்தும் இறந்துபோன நபர்கள் அடகுகடை வைத்திருந்ததால் அவர்களிடம் இருந்த நகைகளை பயன்படுத்தி ஒவ்வொரு எதிரிகளின் மகஜரில் நகைகள் குறிப்பிடப்பட்டு வாக்குமூலங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அடையாளஅணிவகுப்பு நடைபெற்ற சமயத்தில் அடையாளஅணிவகுப்பு நடத்திய நடுவர் முன்பு தாங்கள் எவ்வாறு ராஜாத்திக்கு அடையாளம் காட்டபட்டோம் என்று சொல்லியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

கண்ணையன் கைப்பற்றியதாக சொல்லும் நகைகள் சாதாரணமாக ஒரு குடும்பத்து பெண்களிடம் இருக்கும் நகைகள் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் எதிரிகளுக்கு அடையாளஅணிவகுப்பு நடைபெற்றது போல் நகைகளுக்கு நடுவர் முன்பு அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள் மூலம் வீடுகளில் நகைகள் கைப்பற்றப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அந்த வீடுகள் யார்யாருக்கு பாத்தியபபட்டது அதில் யார்யார் வசிக்கிறார்கள் என்று விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலங்கள் அனைத்தும் கணிணியில் தட்டச்சு செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டுள்ளதாலும் ஒரு சாட்சிக்கு எடுக்கப்பட்டுள்ள வாக்குமூலம் மற்றொரு சாட்சிக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளதாலும் இந்திசாட்சி சட்டபிரிவு 65(பி)படி சான்றிதழ் வழங்கப்படாததால் வாக்குமூலங்களை ஏற்றுகொள்ளகூடாது என்றால் சரியல்ல.

வினோத், செல்வம் ஆகியோர் கைது செய்யும் முன்பே இந்த வழக்கில் சம்மந்தப்பட்டதாக சொல்லும் நகைகள் யார்யார்வசம் உள்ளது. எத்தனை எதிரிகள் சம்மந்தப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் ஆய்வாளருக்கு தெரியவந்துள்ளது என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே கைது செய்யப்பட்ட எதிரிகளின் வாக்குமூலத்திலிருந்து தெரியவந்தது. இவ்வழக்கில்ஆய்வாளர் கண்ணையன் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றும், எதிரி செல்வம், மற்றும் வினோத் ஆகியோர் காவல்நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Sd/– L. Kalaivani,
III Additional District Judge,
Salem.